**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**அ.வ எண்: 87/2017 கருத்தப்பாண்டியன் (பிசா3) தேதி: 03.03.2026.**

**பிசா. 3 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் வாதி தரப்பில் விசாரணை:**

ராமசுப்பிவிற்கு 10 ஏக்கர் பாத்தியம் என்பது எனக்கு எப்படி தெரியும் என்றால் அவருக்கு அவரது சகோதரர் வழியில் பாகப்பிரிவினை அடிப்படையில் கிடைத்தாகுமம். அந்த பாகப்பிரிவினை எந்த ஆண்டு நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். 20 வருடங்களுக்கு முன்பு நடந்தது. ராமசுப்பிவிற்கு பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்தில் அவர் பெயருக்கு பட்டா உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராமசுப்பிவிற்கு அவரது குடும்பத்தில் பாகப்பிரிவினையில் 10 ஏக்கர் கிடைத்ததாக நான்கூறுவது தவறு என்றால் சரியல்ல. ராமசுப்பு முத்து இருளான்டி பெயரில் கிரைய ஒப்பந்தம் போட்டார். அந்த கிரைய ஒப்பந்தம் 20 வருடங்களுக்கு முன்பு போடப்பட்டது. அந்த கிரைய ஒப்பந்தத்தை நான் பார்க்கவில்லை. கிரைய ஒப்பந்தம் சம்பந்தமாக ஒரு ஏக்கர் ரூ.35,000/- என பேசி கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது. நான் அங்கு அருகில் இருந்தேன். அவர்களுக்குள் தொகை கொடுத்ததை நான் பார்க்கவில்லை. ராமசுப்பு முத்து இருளான்டியிடம் ஒப்பந்தம் போட்டதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. முத்து இருளாண்டி அனுபவம் செய்து வந்ததாக நான் கூறும் நிலையில் அவர் பெயரில் பட்டா உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நான் செல்வது போல் முத்து இருளாண்டி தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது என்றாலும், ராமசுப்பு எந்த காலத்திலும் யாரிடமும் ஒப்பந்தம் போட்டது கிடையாது என்றாலும் சரியல்ல. முத்து

இருளாண்டி அனுபவம் குருசாமி நாயக்கரின் வாரிசுகளுக்கு தெரியும் என நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. என்னை நீதிமன்றத்திற்கு முத்து இருளாண்டி அழைத்து வந்தார். முத்து இருளாண்டிக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் 7ம் பிரதிவாதி தாவா இடத்தை ஆக்கிரமிப்பு செய்து தான் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை :** 1, 2, 4, 6 பிரதிவாதிகள் தரப்பில் வாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**மறுவிசாரணை:** இல்லை

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.